

நேற்று (21.03.2025) தலைமைச் செயலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி. கீதா ஜீவன் தலைமையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் 2025–2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசுச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு கூடுதல் செயலாளர் ச.வளர்மதி, சமூக நல ஆணையர் திருமதி ஆர். லில்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

### ஜெய.ராஜமூர்த்தி – கவிச்சுடர் கவிதைப்பித்தன் – நா.சந்திரபாபு– ந. இராமசாமி – போர்முரசு கதிரவன் பங்கேற்பு

பெங்களூரு, மார்ச் 22 -

கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் 72-வது பிறந்தநாள் விழா பெங்களூரில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

மார்ச் 23-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் அலசூர் ஏரிக்கரை அருகே உள்ள பெங்களூர் தமிழ் சங்க அரங்கத்தில் இந்த விழா நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் இரா. அன்பு தமிழ் தாய் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி, தலைவர் முருகு தர்மலிங்கம் தலைமை தாங்குகிறார். பேராசிரியர் வணங்காமுடி, கழக முன்னோடி வி.எஸ். மணி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராஜசேகரன், முருகானந்தம், விகாஷ் ஆ.கரிகாலன், பிரபு திருமதி சற்குணா இளமதி, காயத்திரி பிரபு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந. ராமசாமி முன்னிலை வகிக்கிறார். மாநில நிர்வாகிகள், இலக்கிய அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச. நிர்வாகி கள், முன்னாள் இந்நாள் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கலைஞரின் உடன்பிறப்புகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

மருத்துவர். ஜெய.ராஜமூர்த்தி (இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை) கவிச்சுடர் கவிதைப்பித்தன், அரிமா டாக்டர் நா. சந்திரபாபு (தலைமை இலக்கிய அணி, பொருளாளர்) ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர். திருமதி. தங்கவயல், ஆ.கரிகால வளவன் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார். முருகமணி செல்வம் நன்றி உரை ஆற்றுகிறார்.

விழாவில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. முத்துமணி நன்னன் தலைமை தாங்குகிறார். அண்ணா வழியில் அயராதுழைப்போம் என்ற தலைப்பில் ந.இராமசாமி அமைப்பாளர், கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார். ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம் என்ற தலைப்பில் தங்கவயல் ஸ்ரீதர் கர்நாடக மாநில தி.மு.க. உரையாற்றுகிறார்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்ற தலைப்பில் தங்கவயல் கரிகாலன் உரையாற்றுகிறார்.

மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற தலைப்பில் கிரி துணை அமைப்பாளர், கலை இலக்கிய பேரவை உரையாற்றுகிறார். வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம் என்ற தலைப்பில் தங்கவயல். எ.வி.மதியழகன் உரையாற்றுகிறார்.

நாட்டியாஞ்சலி நிருத்தியாலயா நாட்டியக்குழுவினரின் திராவிடம் வளர்த்த திராவிட இயக்க பாடல்கள் அமைப்பு : திருமதி. சுப்புலக்குமி குழுவினர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்பாளராக கர்நாடக மாநில தி.மு.க. கழக இலக்கிய அணி செயலாளர் போர்முரசு கதிரவன் மேற்கொண்டு வருகிறார்.

# மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்! ஆலந்தூர் மலர் மன்னன் சிறப்புரை!

திண்டிவனம், மார்ச் 22 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணம் மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஓமந்தூர் ஊராட்சியில் நடைபெற்றது.

மரக்காணம் ஒன்றிய துணைப் பெருந்தலைவரும் மரக்காணம் மேற்கு ஒன்றிய செயலாளருமான பழனி தலைமை தாங்கினார்.ஒன்றிய நிர்வாகிகள் குமார், சரவணன், ரவிக்குமார், மீனா குமாரி, ஆதிகேசவன், ராமமூர்த்தி, தேவதாஸ், ஊராட்சி மன்ற தலைவர் ராஜ சுலோச்சனா ,கிளை கழகசெயலாளர்கள் மணிகண்டன், ராஜாராமன், நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஒன்றிய பொருளாளர் முருகன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்ஆலந்தூர் மலர்மன்னன்,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டு கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்

தொடர்ந்து முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் ரவிக்குமார்,மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், கழக முன்னோடிகள், கழக நிர்வாகி கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சம்பத் நன்றி கூறினார்.

### கொடுங்கையூர் என்.கார்த்தீபன் தலைமை! அ.முருகன் முன்னிலை!

# பெரம்பூர்34 (அ) வட்டத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### இரா.கிரிராஜன் எம்.பி. - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மார்ச். 22-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34(அ) வட்ட தி.மு.க.சார்பில்

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (22.03.2025, சனிக்கிழமை,) மாலை 6.00 மணிக்கு கட்டபொம்மன் மெயின் ரோட்டில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு கொடுங்கையூர் என்.கார்த்தீபன் தலைமை வகிக்கிறார். அ.முருகன், க.ஜெயராமன், எஸ்.ஆர்.கமலகண்ணன், வை.கௌதமன், எச்.ராஜ்குமார், கே.ரத்தினவேல், இ.ரமேஷ், ஆர்.டி.கார்த்திக், ஏ.பாஸ்கர், ஏ.இந்திரா, டி.அசோக்ராஜ் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

ஜி.ஜோசப், கே.பழனி, ஜி.மணிமேகலை, எஸ். வெஸ்லிபிரான்சிஸ், எம். சுதாகர், டி.சீனிவாசன், ஏ. அன்சர்பாஷா, பி. சுரேஷ் பாபு ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர். இக்கூட்டத்தில் இரா. கிரிராஜன். எம்.பி., மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர்எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

டாக்டர்.கலாநிதி வீராசாமிஎம்.பி., கன்னிகைஜி. ஸ்டாலின், இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, வி. தயாளன், அ.தமிழ்ச்செல்வன், பா.மதிவாணன், க.அமுல், டி.கமலகண்ணன், க.சர்மிளாகாந்தி, கே.வி.ராஜன், எம்.உமாபதி, இரா.அரிதாஸ், கே. இ.செந்தமிழரசு, சி.எஸ். இரவி, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, க.பாபு, த.ஆறுமுகம், எஸ்.அருள், ஜி.மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், அ.ஜியாவுதீன், இரா.லீலாவேலு, எம்.லதா, அ.செந்தூர்பாண்டியன், மு.சாகுல் ஹமீது, எஸ்.சாக்ரடீஸ், வி.வேதா, வி.எஸ்.பிரபு, இரா.ஜோதிமணி, டி.சேகர்வர்மா, ந.நந்தகோபால், என்.சரவணன், எம்.அருஞ் சக்ரவர்த்தி, இ.சையத்அலிகான், எஸ்.கோவர்தனன், மாசி.முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எஸ்.ஏ.சுரேஷ் நன்றி கூறுகிறார்.



நேற்று (21.03.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் தமிழ்நாடு பயணச்சந்தையை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். உடன் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர் க.மணிவாசன் மற்றும் சுற்றுலா ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஷில்பா பிரபாகர் சதிஷ், மண்டல இயக்குநர் (தெற்கு), இந்தியா டூரிஸம் டி வெங்கடேசன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் ச.கவிதா, மேலாண்மை இயக்குநர், டி.டி.ஃப். கசண்பர் இப்ராஹீம், ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

### பொள்ளாச்சி புதிய நூலகம் ஏப்ரலில் திறக்கப்படவிருக்கிறது!

# திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பீட்டில் மாபெரும் கலைஞர் நூலக பணி தொடக்கம்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேச்சு!

சென்னை, மார்ச் 22 -

சட்டப்பேரவையில் பொள்ளாச்சியில் புதிய தாக புதுப்பிக்கப்பட்ட நூலகம் வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி திறக்கப்படவிருக்கிறது என்றும் திருச்சியில் ரூ.290 கோடி மதிப்பீட்டில் ஒரு மாபெரும் கலைஞர் நூலகத்திற்கான பணியை முதல்வர் அவர்கள் துவக்கித்துள்ளார்கள் என்றும் அ.தி.மு.க. உறுப்பினர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

நூலகம் கட்டுவதற்கு வழங்கப்பட்ட காலிமனையை பொள்ளாச்சி நகராட்சியிடமிருந்து பெற்று மாவட்ட நூலகத்திற்கு வழங்க அரசு ஆவன செய்யுமா? என்று அ.தி.மு.க. உறுப்பினர் கேட்ட கேள்வியைத் தொடர்ந்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி அளித்த பதில் வருமாறு:-

அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 290 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கின்ற ஒரு மாபெரும் கலைஞர் நூலகத்திற்கான பணியை இன்று காலை துவக்கி வைத்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, தங்களின் அனுமதியோடு இவ்வினாவிற்கான பதிலை அளிக்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி மரப்பேட்டை பகுதியில் ஏற்கெனவே செயல்பட்டு



வந்த பழுதடைந்த எண் 1 முழுநேர கிளை நூலகத்திற்கான கட்டடத்தை இடித்துவிட்டு, அதே இடத்தில் 1,862 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்களுடன் பொதுப் பணித் துறை மூலம் புதிய கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்பட்டு, அப்பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. எஞ்சி யிருக்கும் சிறு பணிகளும் விரைவில் முடிக்கப்பட்டு, 10-4-2025க்குள் கட்டடம் நூலகத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, வாசகர்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். எனவே, பொள்ளாச்சி நகராட்சியிடமிருந்து காலிமனையை நூலகம் கட்டுவதற்கு நில மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளைய சமுதாயத்தை மனதில் வைத்து கேட்கப்பட்ட ஒரு நல்ல கேள்வி. ஏற்கெனவே 1,762 square feetல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருடன் இதுகுறித்து கலந்துபேசி, அதற்கான கருத்துருக்கள் பெறப்பட்டு, இன்னும் தேவைப்படுகின்றபட்சத்தில் கண்டிப்பாக அதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே இருக்கின்ற அனைவருக்குமே தெரியும், நூகலத்தினுடைய பொற்காலம் என்று சொன்னால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு பல சான்றுகள், ஏன் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இருக்கக்கூடிய பொள்ளாச்சி தொகுதி, அந்த மாவட்டம் சார்ந்து கிட்டத்தட்ட 55 நூலகங்கள் கட்டிக்கொண்டிருக்கிறோம்.

இவை அல்லாமல், தமிழ்நாடு முழுவதும் ஊர்ப்புற நூலகமாக இருந்தாலும், கிளை நூலகமாக இருந்தாலும், முழுநேர கிளை நூலகமாக இருந்தாலும், மாவட்ட மைய நூலகமாக இருந்தாலும், 821 நூலகங்கள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், கோயம்புத்தூர் மாவட்டத்திற்காக, பெருமைத் தேடித் தருகின்ற அளவிற்கு தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் மிகப் பெரிய நூலகம் கட்டுகின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, எங்கெல்லாம் நூலகம் கட்டித் தர முடியுமோ, அது கண்டிப்பாக கட்டித் தருகின்ற பணிகளில் நாங்கள் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், தவறுதலாக 62 சென்ட் நிலம் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உரிய அமைச்சருடன் உட்கார்ந்து பேசி, அதற்கான கருத்துரு பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதல்களின்படி எடுக்கப்படும் .

2012 ஆம் ஆண்டு முதல் இந்த issues ஓடிக்கொண்டிருக்கிறது. அன்றைக்கு இருந்த ஆணையர் அவர்கள் estimate கொடுத்து, அதற்கான பணத்தை கொடுங்கள் என்று கேட்டிருந்தால், அன்றையதினமே இதனை முடித்திருக்கலாம். 2019 ஆம் ஆண்டு நாம் என்ன செய்தோம் என்றால், உடனடியாக இடைப்பட்ட காலத்தில் வாகர்கள் பாதிக்காத அளவில் ஒரு தாலுகா அலுவலகத்தில் நடத்திவிட்டு, இருக்கின்ற அந்தப் பழுதடைந்த இடத்தை முழுமையாக இடித்துவிட்டு, 1,762 சதுர அடியில் புதிதாக நாங்கள் கட்டிவிட்டோம். 10-4-2025 அன்று அதனை நாங்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துவிடுவோம். இருந்தாலும் அண்ணன் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தின் அடிப்படையில் கண்டிப்பாக சம்பந்தப்பட்ட அமைச்சருடன் உட்கார்ந்து பேசி, அதற்கான நல்ல ஒரு தீர்வை கண்டிப்பாக எடுப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

### அரசு அறிவித்த ரூ.20 ஆயிரம் உதவித் தொகை:

# தனியார் மற்றும் நிகர்நிலை பல்கலைக் கழகங்கள் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### புதுச்சேரி சட்டப் பேரவையில் – எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேச்சு!

புதுச்சேரி, மார்ச். 22-

மாநில அரசு அறிவித்த ஊக்கத் தொகையான ரூ.20 ஆயிரத்தை தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களும் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுச்சேரி சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசுகையில் குறிப்பிட்டார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் நேரமில்லா நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது: -

2021- ஆம் ஆண்டு தேசிய மருத்துவ கவுன்சில் நான்கு ஆண்டுகள் மருத்துவக் கல்வி முடித்து, ஐந்தாம் ஆண்டு பயிற்சி மருத்துவப் பணிபுரியும் மருத்துவ மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையை அறிவித்தது. தேசிய மருத்துவ ஆணையத்தின் உத்தரவை ஏற்று புதுச்சேரி அரசு பயிற்சி மாணவர்களுக்கு மாதம் ரூ.20 ஆயிரம் உதவித் தொகையை தனியார் கல்லூரி நிறுவனம் வழங்க வேண்டும் என உத்தர



விட்டது. இந்த உத்தரவை அரசு மருத்துவக் கல்லூரி மட்டுமே பின்பற்றி வருகிறது.

ஆனால், தனியார் மருத்துவக் கல்லூரிகள் வழங்க மறுத்து, குறைந்த அளவில் ஊக்கத் தொகை வழங்குகிறது. அதேபோன்று நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் மருத்துவ பயிற்சி பணி செய்யும் மாணவர்களுக்கு வெறும் ரூ.2 ஆயிரத்து 500 மட்டும் வழங்கி மாணவர்களை ஏமாற்றுகின்றனர்.

இதுகுறித்து பயிற்சி மாணவர்கள் மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பினர் அரசிடம் பலமுறை புகார் அளித்தும் அரசு வழக்கம் போல் மௌனமாக இருக்கிறது. தேசிய மருத்துவ ஆணையத்தின் உத்தரவுகளை மதிக்காமல் தன்னிச்சையாக புதுச்சேரியில் இயங்கும் தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலை பல்கலைக் கழகங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புதுச்சேரி அரசு அறிவித்த ரூ. 20 ஆயிரம் உதவித் தொகையை தனியார் மருத்துவக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் உடனடியாக வழங்க நடவடிக்கை வேண்டும்.

அதேபோல் மாஹே பிராந்தியத்தில் உள்ள ராஜீவ்காந்தி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 5 ஆயிரமாக இருந்த ஊக்கத் தொகையை ரூ. 20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்து இரண்டு ஆண்டுகள் ஆகிறது. அதையும் நடப்பாண்டு வழங்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக புதுச்சேரி அரசை வலியுறுத்துகிறேன்.

கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத் துறையில் ஏற்படுத்தப்பட்ட பைலேரியா பிரிவு இருக்கிறதா என்று தெரியவில்லை. இத்துறையில் ஆட்கள் பற்றாக்குறை ஒருபுறம் இருக்கிறது. மறுபுறம் கொசுக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் விசிஆர் சி எனப்படும் வெக்டர் கன்ட்ரோல் ரிசர்ச் சென்டர் எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் கொசுக்களின் தன்மை குறித்து ஆராய்ச்சி செய்து அதை கட்டுப்படுத்த உரிய மருந்தை பரிந்துரைக்கிறது. அதை புதுச்சேரி பைலேரியா பிரிவு கடைபிடிக்கிறதா என்று தெரியவில்லை. உரிய மருந்து இல்லை என்பதும் பெரிய குற்றச்சாட்டாக உள்ளது.

ஆகவே, புதுச்சேரியில் திடீர் கொசு உற்பத்தி அதிகரிப்பதற்கான காரணத்தை கண்டறிந்து, சுகாதாரத் துறையின் பைலேரியா பிரிவு, நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துகளை அரசு முடுக்கி விட்டு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இரா.சிவா பேசினார்.

# பெருங்களத்தூர் வடக்குப் பகுதியில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம் மார்ச். 22-

பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக மற்றும் தாம்பரம் மாநகர இளைஞரணி சார்பில் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது. 22-03-2025 / 23-03-2025 / தேதிகளில் கலைஞர் மைதானம் டி.டி.கே நகர், நேரம் : காலை 8 மணியிலவில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் / 4வது மண்டல குழு தலைவர் டி.காமராஜ் தலைமையில் பகுதி அவைத்தலைவர் டி.ஆர்.கோபி எம்.சி., வரவேற்பிலும் பி.கே.ஏ. சத்தியபிரபு, வீ.கார்த்திக், வே. சிவசுப்பிரமணியன், ச.பிரபு, ஜெ.இன்சாமம், கா.மு. சூர்யா, எஸ்.கார்த்திக், கே.எஸ்.யுவராஜ், கே. எம்.தாஸ், ஆர்.திவாகர், கே.பாலசுப்பிரமணி, ந.மதன், ஜா.நரேஷ்குமார், வெ.கார்த்திக்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. போட்டியை துவக்கி வைத்து பரிசுகளை வழங்குபவர்கள் கழகப் பொருளாளர், கழக மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு சிறு குறு தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்/ காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ் அவர்கள் எஸ்.இந்திரன், எஸ்.சேகர், ஆதிமாறன், ஆர்.எஸ்.சங்கர், இரா.சுரேஷ், பிரபுகஜேந்திரன், கோல்டு டி.பிரகாஷ், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாநகர அணிகளின் நிர்வாகிகள், பெருங்களத்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள், தாம்பரம் மேற்கு பகுதி நிர்வாகிகள், பெருங்களத்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள், தாம்பரம் மேற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள், பெருங்களத்தூர் தெற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பொது மக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் டி.காமராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை ச.இராஜேஷ் செய்துள்ளார்.